IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.439/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.55 p.m.

<u>பி.வா.சா. 1 சாட்சி வேல்முருகன் த.பெ.சந்தனத்தேவர்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 10.03.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனது எதிர்வழக்குரைக்கு நான்தான் விபரம் கூறினேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்திற்கும் நான்தான் விபரம் கூறினேன்.

2. தாவாச் சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால் 2 ஏக்கர் 63 செண்டு ஆகும். மேற்படி 2 ஏக்கர் 63 செண்டு ஆதியில் இராமசாமிராஜா என்பவருக்கு பாத்தியம் என்றால் தெரியாது. மேற்படி இராமசாமிராஜாவின் மனைவி பெயர் என்ன என்றால் பர்வதவர்த்தினி ஆகும்.

3. இராமசாமிராஜாவுக்கும், பர்வதவர்த்தினிக்கும் எத்தனை பிள்ளைகள் என்றால் 3பெண்பிள்ளைகள் மற்றும் 2ஆண்பிள்ளைகள் ஆவார்கள். மேற்படி 3பெண்பிள்ளைகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபணவாக்குமூலத்தில் 3பெண்பிள்ளைகளின் பெயர்கள் எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவர்களின் வாரிசு சான்றிதழை வைத்து தெரிந்து கொண்டேன். மேற்படி 3பெண்பிள்ளைகளின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

4. எனது நிரூபணவாக்குமூலத்தில் வெங்கிடலட்சுமி, இராமகீதா, பானுமதி என்ற 3பெண்மக்கள் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ராஜூபாபு மற்றும் ரகுராம்ராஜ் என்ற 2ஆண்பிள்ளைகள் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பர்வதவர்த்தினியின் கணவர் பெயர் இராமசாமிராஜா ஆகும். மேற்படி இராமசாமிராஜா உயிருடன் இருந்த காலத்தில் 3பெண்பிள்ளைகளும் 5.4.1970ல் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

5. மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் Aஇலக்கச் சொத்தானது இராமசாமிராஜாவுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். Bஇலக்கச் சொத்தானது வெங்கிடலட்சுமி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். C இலக்கச் சொத்தானது இராமகீதாவுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். D இலக்கச் சொத்து பானுமதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. வழக்குச் சொத்து இராமகீதாவுக்கு பாத்தியம் என்றால் சரிதான். 1ம்வாதி இராமகீதாவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 1ம்வாதிக்கும், இராமகீதாவுக்கும் பிறந்த குழந்தைதான் சித்ரா என்றால்

சரிதான். மேற்படி இராமகீதா எப்போது இறந்தார் என்றால் 1988ல் இறந்தார். இராமகீதா இளவராக இருந்த காலத்தில் பர்வதவர்த்தினி அம்மாள் என்னிடம் பணம் வாங்கியிருந்தார் என்றால் ரூ.2இலட்சம் வாங்கியிருந்தார். மேற்படி பணத்தை ஒரே தேதியில் கொடுத்தேனா என்றால் ஒரே தேதியில்தான் கொடுத்தேன். தேதி ஞாபகம் உள்ளதா என்றால் 1980ல் கொடுத்தேன்.

7. மேற்படி பணத்தை நான்மட்டும்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். 1980ல் பணம் கொடுத்தபோது ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் வாய்கிரலாக கிரையம் பேசி ரூ.2,40,000/- என முடிவு செய்து ரூ.2இலட்சம் கொடுத்துள்ளேன். மீதமுள்ள ரூ.40ஆயிரத்தை எத்தனை மாதத்தில் கொடுத்தேன் என்றால் ஆவணம் கொடுத்தவுடன் தருவதாக கூறினேன்.

8. 1980 முதல் 1988ல் இராமகீதா இறக்கும் வரை பர்வதவர்த்தினியிடம் கிரையம் முடித்து கொடுக்க கேட்டேனா என்றால் கேட்டேன். மேற்படி இராமகீதா இளவராக இருந்தபோது இளவரின் சொத்தை கிரையம் பேசினால் சட்டப்படி செல்லாது என்றால் பர்வதவர்த்தினியும் அவரது கணவரும் ஒப்பந்தம் பேசிக் கொண்டார்கள். மேற்படி ஒப்பந்தம் பற்றி தெரியுமா என்றால் இளவரின் பராமரிப்புச் செலவு, படிப்புச் செலவிற்காக விற்பனை செய்து கொள்வது என பேசிக்கொண்டார்கள்.

9. மேற்படி இளவரின் சொத்தை விற்பனை செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி வாங்கியுள்ளீர்களா என்று கேட்டேனா என்றால் இல்லை. நிலுவைத்தொகையான ரூ.40ஆயிரத்தை எந்த வருடத்தில் பர்வதவர்த்தினிக்கு செலுத்தினேன் என்றால் 2017ல் நீதிமன்றத்தில் பணம்

செலுத்தினேன். வாய்கிரலாக கிரையம் ஏற்பட்டு பர்வதவர்த்தினியை தேடிப்பார்த்து கண்டுபிடிக்கமுடியவில்லை. அதனால் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திவிட்டு வழக்கு தாக்கல் செய்தேன்.

10. மேற்படி வழக்கை வாதி தாக்கல் செய்த பிறகுதான் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு யார்மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் பர்வதவர்த்தினி மீது தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் 1ம்வாதியை தரப்பினராக சேர்த்தேனா என்றால் 1ம்வாதிக்கு உரிமையில்லை என்று கூறியதால் அவரைச் சேர்க்கவில்லை.

11. 1ம்வாதிக்கு வழக்குச் சொத்து பாத்தியம் என்ற விபரம் எனக்கு தெரிந்தும், அவரின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நானும், பர்வதவர்த்தினியும் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு அ.வ.எண்.127/2011 வழக்கில் தீர்ப்புரை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் அ.வ.எண்.120/2017 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. பி.வா.சா.ஆ.1ல் ரீசர்வே எண் 45/3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 45/3க்கு UDR சர்வே எண் 169/3 என்பதை காட்டுவதற்கு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் வேறு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. தாவாச் சொத்திற்கு எனது பெயரில் பட்டாமாறுதல் ஏற்படுத்தினேனா என்றால் ஏற்படுத்தினேன், பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

13. மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கிஸ்தி இரசீது செலுத்தி வருகிறேனா என்றால் தற்போது வரை செலுத்தி வருகிறேன். மேற்படி கிஸ்தி இரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

14. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது பர்வதவர்த்தினி பெயரில் பட்டா இருந்ததா என்றால் ஞாபகமில்லை.மேற்படி பர்வதவர்த்தினியிடம் பட்டாவை கேட்டேனா என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பக்கம் 3ல் பத்தி 2ல் அட்வான்ஸ் ரூ.2,19,000/–நீக்கி பாக்கி கிரையத்தொகையை 2வது பார்ட்டியிடம் ரொக்கம் பெற்றுக்கொண்டு ஆதரவு தஸ்தாவேஸ்களின் கூட்டுப்பட்டாவை மாற்றி 1வது பார்ட்டி பெயரில் பட்டா வாங்கி வாய்தாவிற்குள் 1வது பார்ட்டி 2வது பார்ட்டிக்கு பத்திரம் பதிந்து செய்து கொடுக்கவேண்டியது என்று சரத்து உள்ளது என்றால் சரிதான்.

15. மேற்படி கூட்டுப்பட்டா யார்யார் பெயரில் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கூட்டுப்பட்டா போஜன் மற்றும் அவரது மகள் சித்ரா பெயரில் கூட்டுப்பட்டா இருந்தது என்ற விபரம் எனக்கு தெரிந்தும் ஞாபகமில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சித்ரா தாவாச் சொத்தில் அவருக்குரிய பங்கை அதற்கான தொகையை போஜனிடம் பெற்றுக்கொண்டு போஜனுக்கு விட்டுக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

16. தாவாச் சொத்து போஜனுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பரிமளா, ஹரிஸ்ராம் ஆகியோர் போஜனின் வாரிசுகள் என்றால் 2வது திருமணம் என்று சொன்னார்கள் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு நன்றாக தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 15.2.2010ல் நான் தாவாச்சொத்தில் போஜனின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால்தான் அவர் தாவா வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

17. போஜன் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கும், பர்வதவர்த்தினிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பை போஜன் அனுப்பினார் என்றாலும் அதை நான் பெற்றுக்கொண்டு எவ்வித பதில்அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல.

18. தாவாச்சொத்து போஜனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர் சர்வசுதந்திர பாத்தியமாக அனுபவம் செய்து வருவதை நான் இடையூறு செய்ததால்தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் பொய்யாக எதிர்வியாஜியம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

<u>**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

3ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 4.40p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.11 10:49:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.